11th December 1961]

Deficit under the Revenue Account (Central grant)

*2233 Q.—**Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரெவின்யூ கணக்கில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட மத்திய சர்க்கார் மானியம் தருகிறார்களா ?

(இ) அப்படியாயின், 1958, 1959, 1960, 1961-ம் ஆண்டுகளில் கொடுத்த மானியம் எவ்வளவு ?

(உ) இல்லையாயின் காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (உ) No, Sir.

Under Article 275 (1) of the Constitution, the Central Government may give grants-in-aid of revenues to such States as the Parliamentary may determine to be in need of assistance. Grants-in-aid under this Article are recommended by the Finance Commission. The Second Finance Commission did not recommend any grants-in-aid of this kind for Madras State. The hon. Member may be interested to know that during the years 1757–1961, this State had the following surpluses in the revenue account :—

	RUPEES IN LAKHS.
1957–58	341·34
1958–59	159·70
1959–60	52·95
1960–61	93·84

SRI S. M. ANNAMALAI : 1961-62ல் துண்டு விழுந்திருக்கிறது. இதைக் கொடுப்பதற்காவது மத்திய சர்க்கார் முன் வருவார்களா ? காரணம், மற்ற மாநிலங்களில் ரெவின்யூ கணக்கில் துண்டு விழுவதை மத்திய சர்க்கார் கொடுத்துக்கொண்டு வருகிறார்களே, நம் மாநிலத்தை மட்டும் புறக்கணிக்க காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது ஏற்படுத்தியிருக்கக்கூடிய நிதிக் கமிஷன் பரிசீலனை செய்து அவர்கள் இனி மேல்தான் சிபார்சு செய்யவேண்டும்.

SRI T. IRUSAPPAN : ஏற்கனவே விவசாயிகள் கட்டி வந்த வரியை விட இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் வந்த பிறகு அவர்கள் வருடத்திற்கு ரூபாயக்கு, 35, 50, 75 நயாபைசா என்று அதிக வரிகள் விதித்திருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை ஆங்காங்குள்ளவர்கள் யோசித்து முடிவு செய்யவேண்டும். இது கிராமப் பிரதிநிதிகளிடம் இருக்கிறது, ஆகவே கிராமப் பிரதிநிதிகளிடம் இதை எடுத்துச் சொல்லவேண்டும், எந்தளவு போடவேண்டும், எந்தளவு போடவேண்டாமென்று.

[11th December 1961

SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, நிதிக் கமிஷனின் பரிசீலனை 1962-63-க்குள் முடிந்து அடுத்த ஆண்டிலேயே கூடுதலான தொகை நம் ராஜ்யத்துக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடிவு காணுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 1961-62 முடிவுக்குள்ளேயே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும். ஜனவரி அல்லது பிப்ரவரியிலேயே அறிக்கை வந்துவிடும்.

SRI V. K. KOTHANDARAMAN: சுதந்திரா கட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தால் ரெவினயூ வரியையே தள்ளுபடி செய்வதாகச் சொல்லியிருக்கிறாரே, அதைப்பற்றி கனம் அமைச்சருடைய அபிப்பிராயம் என்ன?

DEPUTY SPEAKER: How does this question arise? The hon. Member cannot get a reply from the Hon. Minister. He should put this question to the Leader of the Swatantra Party.

Block Development Officer (travelling allowance)

*2234 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் 1960-61-ல் ஒவ்வொரு சமுதாய நலத்திட்ட அதிகாரியும் பெற்ற பிரயாணப்படி எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM:—

Particulars of staff. (1)	Amount of fixed travelling allowance per month. RS. NP. (2)	
1 Block Development Officers (Gazetted)	75	00
2 Block Development Officers (Non-gazetted)	60	00
3 Extension Supervisor	40	00
4 Extension Officer (Co-operation)	40	00
5 Extension Officer (Agriculture)	40	00
6 Extension Officer (Animal Husbandry)	35	00
7 Extension Officer (Panchayats)	35	00
8 Extension Officer (Industries)	40	00
9 Social Education Organiser	35	00
10 Extension Officer (Statistics)	17	50
11 Gramasevak (Grade I)	15	00
12 Gramasevak (Grade II and Gramasevikas)	7	50
13 Social Welfare Workers	7	50

SRI S. M. ANNAMALAI: ஸார், பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தொகை டி.ஏ. ஆக இருந்தாலும், மாதத்தில் ஏறத்தாழ 27-28 நாட்கள் வெளியில் செல்லுகிற காரணத்தினால் அலுவலகத்தில் இல்லாத நிலையில் மக்களுக்குச் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இத்தனை நாட்கள்தான் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டுமென்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்படுமா?